செ.வெ.எண்-02 நாள்-01.11.2018

# பத்திரிக்கைச் செய்தி

**கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம் - 2018-19**

2018-19-ம் ஆண்டிற்கான கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டத்தில், அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் தலா 200 பெண் பயனாளிகள் (ஏழை மற்றும் மிகவும் ஏழை பெண்கள்) என மொத்தம் 1200 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு 4 வார வயதுடைய 50 எண்ணிக்கையிலான அசில் இன நாட்டுக்கோழிகள் மற்றும் இரவுக் கூண்டிற்கான மானியம் ரூ.2,500/- வழங்கப்படும். மேலும் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பு குறித்து ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் பயனாளியாவதற்கான தகுதிகள்: தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (Tamil Nadu State Rural Livelihood Mission) மூலமாக வழங்கப்பட்ட இலக்கு மக்கள் பட்டியல் எண் (Participatory Identification of Poor (PIP Number)) வைத்திருக்கும் மகளிராக இருத்தல் வேண்டும். தங்களது கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். கடந்த ஆண்டுகளில் இத்துறையின் மூலம் வழங்கப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள் (ம) விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் மற்றும் கோழி அபிவிருத்தித் திட்டத்தில் பயனடைந்தவராக இருத்தல் கூடாது. விதவை, ஆதரவற்ற பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அரசு விதிமுறைகளின்படி, தேர்வு செய்யப்படும் பயனாளிகளில் 30 சதவீதப் பயனாளிகள் எஸ்சி / எஸ்டி பிரிவிலிருந்து தேர்வு செய்யப்படுவர்.

மேற்படி திட்டத்தில் பயனாளியாக சேர விரும்பும் பெண்கள் தங்களது கிராமத்திற்கு அருகாமையில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரிடம் **13.11.2018-க்குள்** விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**